செ.வெ.எண்.578 நாள்.10.11.2017

# தாம்பரம் வருவாய் கோட்டம்

நாராயணபுரம் ஏரி, கோவிலம்பாக்கம் நன்மங்கலம் ஊராட்சிப் பகுதிகளில வடிகால்களை மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாராயணபுரம் ஏரியிலிருந்து செல்லும் உபரிநீர் பல்லாவரம் துரைப்பாக்கம் 200 அடி ரேடியல் சாலையில் இருப்பக்கமும் அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள் மூலம் வேகமாக வடிந்து வருவதை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார். கீழ்கட்டளை ஏரி உபரிநீர் வடிகாலியிருந்து வடிகாலில் செல்லும் மழைநீர் விரைந்து வடியும் வகையில் 200 அடி சாலைக்கும் சாந்தி நகருக்கும் செல்லும் இணைப்பு சாலையின் குறுக்கே புதியதாக வடிகால் அமைக்கும் பணி நடைபெற்றுவருவதை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார். சாலையின் குறுக்கே வடிகாலில் 16 அடி நீளமுள்ள குழாய்கள் அமைத்து புதிய வடிகால் வழியே தண்ணீர் விரைந்து செலல நடவடிக்கை மேற்கொள்வது மட்டுமின்றி குழாய்களில் மேற்பகுதியில் மணல் மூட்டைகளை அடுக்கி மண் கொண்டு நிரப்பி சாலை போக்குவரத்தையும் உடனடியாக ஏற்படுத்த அலுவலர்களை கேட்டுக்கொண்டார். புதிய வடிகால் அமைக்கும் போது அருகில் உள்ள மின் கம்பங்களுக்கு பாதிப்பின்றி பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் மழை பெய்தாலும் இந்த புதிய வடிகால் மூலமும் தண்ணீர் விரைந்து வடிவதால் கோவிலம்பாக்கம் ஊராட்சியை சேர்ந்த பகுதிகளில் தண்ணீர் தேங்குவது தவிர்க்கப்படும் என தெரிவித்தார்.

பின்னர், கோவிலம்பாக்கம் ஊராட்சி TNPL காலனி, காகிதபுரம், பவானி தெரு, இராஜேஸவரி நகர், உண்மை நகர், இன்ஜினியர்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கியிருந்த மழைநீர் வடிந்துள்ளதை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார். இப்பகுதியில் உள்ள வடிகால்களை பார்வையிட்ட அமைச்சர் அதிகமாக மழைநீர் வடிந்த போது அடித்து வரப்பட்ட குப்பைகளால் மீண்டும் சிறு வடிகால்களில் அடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் வடிகால்களை சிறிது கூட தண்ணீர் தடையின்றி செல்லும் வகையில் மீண்டும் அடைப்புகளை நீக்கி அதனை சரி செய்ய கேட்டுக்கொண்டார். கீழ்கட்டளை உபரிநீர் வாய்க்காலில் கோவிலம்பாக்கம் பாலத்தில் அடியில தேங்கியுள்ள அடைப்புகளை உடனடியாக நீக்கப்படுவதை அமைச்சர் பார்வையிட்டார். கீழ்கட்டளை உபரிநீர் வாய்க்காலை உட்புறங்களிலும் மிதவை பொக்லைன் கொண்டு தூர் வாரி உபரிமழைநீர் விரைந்து வடிய செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், நன்மங்கலம் மண்கண்டன் நகர், கமலம் நகர் பகுதிகளில் மழைநீர் வடிவதை பார்வையிட்ட அமைச்சர் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து வருவாய் துறையின் ஆவணங்களின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் மழைநீர் வடிவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இந்நிகழ்ச்சியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்தன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், முன்னாள ஊராட்சி உறுப்பினர் திரு.எஸ்.குமார், வருவாய் துறை, ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.